
# பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி

(தேசிய தர நிர்ணயக் குழுவால் 'ஏ' தரச் சான்றிதழ் பெற்றது)
**விளார், புறவழிச்சாலை, தஞ்சாவூர்.**

# தமிழ்த்துறை செய்தி மடல்

*திருவள்ளுவராண்டு ஹேவிளம்பி வருடம் 2048* *மார்ச்சு திங்கள் 2018*



"நறுவீ உறைக்கும் நாகநெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவிவீழுஞ் சாரல்
பறம்பிற் கோமான் பாரியும்"

சாய்ந்து நிற்கும் நெற்கதிரும் தஞ்சையின் பெருமையைச் சொல்லும். அத்தகைய மண்மணம் கமழும் தஞ்சை தரணியில் பெண்கல்விக்காக வித்திட்டு உதயமானதுதான் பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி. இத்தகு சிறப்புமிக்க கல்லூரியில் தமிழ் உயர்ந்தால் அறிவு உயரும், அறம் ஓங்கும் என்பதற்கிணங்க பகுதி 1 தமிழை உயிரினும் மேலாய், உணர்வெனும் செங்கோலாய் அனுதினமும் மாணவர்களிடையே பயிற்றுவித்து, முத்தமிழையும் அரங்கேற்றி தமிழ் உணர்வை மேலோங்கச் செய்து வருகிறது தமிழ்த்துறை.

## 21. 08. 2017–ஆடுவோமே பள்ளு பாடுவோமே



பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான மாபெரும் கோலாகலக் கலைவிழாவான "ஆடுவோமே பள்ளு பாடுவோமே" என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. நகைச்சுவை நடிகரும், இயக்குநரும், 400 படங்களுக்கு மேல் நடித்தவருமான மனோபாலா அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்திருந்தார். 'கும்கி' புகழ் நடிகரும் கவிஞருமான ஜோ மல்லூரி வாழ்த்துரை வழங்கினார். 10க்கும் மேற்பட்ட கல்லூரிகளிலிருந்து 200 மாணவர்கள் பங்கேற்றனர். பாடல், நடனம், இசை என்ற பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற இப்போட்டிகளில் ஒட்டுமொத்த தரப் புள்ளிகளை தஞ்சை பாரத் கல்லூரி பெற்று கோப்பையை வென்றது.

## 19. 11. 2017 – தமிழமுத மன்ற விழாவில் கவிதை வாசித்த பேராசிரியர்கள்











தஞ்சாவூர் தமிழமுத மன்ற ஆண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற கவிதைத் திருவிழா போட்டிகளில் கீழ்க்கண்ட தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் கலந்து கொண்டு கவிதை வாசித்தனர்.

1. முனைவர் க.ஆனந்தி
2. முனைவர் இரா.ஜெயஸ்ரீ
3. முனைவர் க.முத்தழகி
4. திருமதி பா.அனுராதா
5. திருமதி இல.மேனகா
6. திருமதி த.அமுதஜோதி
7. செல்வி அ.அல்போன்ஸ் சிந்தியா

இப்போட்டியில் முனைவர் இரா.ஜெயஸ்ரீ முதல் பரிசு பெற்று ரூ.500 பணப்பரிசினையும், சான்றிதழையும் பெற்றார். முனைவர் க.ஆனந்தி மூன்றாம் பரிசாக ரூ.200 பணப்பரிசினையும், சான்றிதழையும் பெற்றார்.

## 30. 12. 2017 – விருது பெற்ற பேராசிரியர்கள்






திருச்சியிலுள்ள இந்திய கல்விசார் ஆய்வாளர்கள் அமைப்பான தமிழாய்வுச் சங்கமம், மதுரை உலகத் தமிழ்ச்சங்கமத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கு, அவர்களின் தமிழ்ப்பணியினைப் பாராட்டி விருது வழங்கியது.

1. முனைவர் க.ஆனந்தி - திருவள்ளுவர் விருது
2. முனைவர் இரா.ஜெயஸ்ரீ - பாரதியார் விருது
3. முனைவர் க.முத்தழகி - திருவள்ளுவர் விருது
4. பேராசிரியர் த. அமுதஜோதி - பாரதியார் விருது

## 24. 02. 2018 உலக தாய்மொழி தினவிழா






பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி தமிழ்த்துறையின் 'நறுவீ' தமிழ்ச்சங்கம்

சார்பில் உலகத் தாய்மொழி தினவிழா 24.02.2018 அன்று நடைபெற்றது. துபாயின் தொழிலதிபரும், தமிழ் ஆர்வலருமான திரு. சா.ரா. நடராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், ந.மு. வேங்கடசாமி நாட்டார் கல்லூரியின் செயலர் முனைவர் இரா.கலியபெருமாள் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகவும் வருகை தந்து தமிழின் தொன்மையையும், சிறப்பையும் மாணவிகளுக்கு எடுத்துக் கூறினர். விழாவில் பேராசிரியர்கள் எழுதிய 'புதிய வேர்கள்' எனும் கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டது.

# நறுவீ செயல்பாடுகள்

## நறுவீ தமிழ்ச்சங்கம்

"நறுவீவேங்கை இன வண்டு ஆர்க்கும்" – மலர்களின் சிறப்பே நறுமணம் பரப்புவதாகும். அதுபோல நறுவீ தமிழ்ச்சங்கம் தமிழ் மணம் பரப்பும் வகையில் சொற்பொழிவுகள், கவியரங்கங்கள், பட்டிமன்றங்கள் போன்ற நிகழ்வுகள் மூலம் பேராசிரியர்களின் தமிழார்வத்தை வெளிகொணர்ந்து வருகிறது.

## 'கமழி' - செயல்பாடுகள்

தமிழ்த்துறை நறுவீ தமிழ்ச் சங்கத்தால் மாதாந்திர நிகழ்வுகள் 'கமழி' என்ற பெயருடன் நிகழ்ந்து வருகின்றது. இதன்கீழ் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் மட்டுமன்றி கல்லூரியின் அனைத்துத் துறைப் பேராசிரியர்களும் பங்கெடுத்து, தங்கள் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தும் வண்ணம் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

1. முனைவர் சு. சத்தியா–பண்டிதை அசலாம்பிகை அம்மையார்-01.08.2017







2. சிறப்புக் கவியரங்கம் - 07.09.2017







3. பொன்மொழிகள் போட்டி - உலக மாற்றுத் திறனாளிகள் தினம்-04.12.2017





4. திருமதி பா. அனுராதா – புலவர் அய்யாறு ச. புகழேந்தி–06.12.2017





## கருத்தரங்கங்கள் மற்றும் இதழ்கள்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் 41 தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு கட்டுரை வழங்கினார்கள். வல்லமை மின்னிதழ் (Vallamai, e-journal), **LFS, IJCR** போன்ற பன்னாட்டு இதழ்களிலும் 15 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர்.

## பேராசிரியர்களின் நூல் வெளியீடு

ஈரோடு பல்லவி பதிப்பகத்தாரோடு இணைந்து தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் க.ஆனந்தி, முனைவர் இரா.ஜெயஸ்ரீ, திருமதி பா. அனுராதா ஆகியோர் நூல்களை வெளியிட்டுள்ளனர்.



## கல்வி இணைச் செயல்பாடுகள்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் திருவையாறு தமிழ்ப்பேரவை, தஞ்சாவூர் ஏடகம், தஞ்சாவூர் தமிழமுத மன்றம், காவேரி அன்னை கலைமன்றம், முத்தமிழ் முற்றம் போன்ற அமைப்புகளோடு இணைந்து செயல்பட்டு வருகின்றனர். இவ்வமைப்புகளில் நடைபெறும் விழாக்களில் சிறப்புப் பேருரை நிகழ்த்துதல், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பட்டிமன்றங்கள் போன்றவற்றில் தொடர்ந்து பங்கேற்று வருகின்றனர்.

மேலும் பிற பள்ளி, கல்லூரிகளில் நடைபெறும் இலக்கிய மன்ற விழாக்கள், மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டல், போட்டிகளில் நடுவர்களாகப் பங்கேற்பதன் வழி தங்கள் ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர்.









தமிழர் கலை இலக்கிய மரபுகள் - மீட்டுருவாக்கம் என்ற தலைப்பில் 2017-2018ஆம் கல்வியாண்டில் தமிழ்த்துறை சார்பாக பல்வேறு செயல்பாடுகள் நடத்தப்பெற்றது. எதிர்வரும் கல்வியாண்டில் **“கனவு மெய்ப்பட காரியத்தில் உறுதிகொள்”** என்ற தலைப்பில் துறைச் செயல்பாடுகள் அனைத்தையும் செயல்படுத்திடத் திட்டமிட்டுள்ளோம்.